


# "தமிழ்மொழியை சமத்துவப்படுத்தியது தி.மு.க!"

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் எட்டாவது அமர்வில், ‘அரசியல் இயக்கம் மட்டுமல்ல, பண்பாட்டு இயக்கமும்கூட...’ என்ற தலைப்பில் எழுத்தாளர் சுகுணா திவாகர் அவர்கள் ஆற்றிய உரை:**

“இந்தியாவில் நூற்றாண்டுகளைக் கண்ட இயக்கம் என்றால் நான்கு இயக்கங்கள் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சி, பொதுவுடமை இயக்கம், ஆர்.எஸ்.எஸ் மற்றும் திராவிட இயக்கம்.

## தலைவர்களே படைப்பாளிகள்

திராவிட இயக்கம் நூற்றாண்டைக் கடந்துவிட்டது தி.மு.க 75 வருடங்களைக் கடந்துவிட்டது. நீண்ட பாரம்பரியம் கொண்ட மற்ற இயக்கங்களுக்கும் தி.மு.க.வுக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன? கலையையும் இலக்கியத்தையும் அரசியல் ஆயுதங்களாகப் பயன்படுத்தி, தங்களுடைய கொள்கைகளைப் பரப்பியது மட்டுமல்லாமல் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்ற முடியும் என்று நிரூபித்த ஒரே இயக்கம், இந்தியாவிலேயே தி.மு.க.தான். தி.மு.க.வைத் தோற்றுவித்த பேரறிஞர் அண்ணாவாக இருந்தாலும் சரி, அண்ணாவின் தம்பிமார்களாக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, சிபி சிற்றரசு என்று அத்தனை பேருமே வெறுமனே அரசியல்வாதிகளாக மட்டுமல்ல, எழுத்தாளர்களாகவும் கலைஞர்களாகவும் இருந்தார்கள். இந்தியாவிலேயே இப்படி தலைவர்கள் எழுத்தாளர்களாகவும் கலைஞர்களாகவும் இருந்த ஒரே இயக்கம், தி.மு.க. மட்டும்தான்.

## புரட்சியாளர் பெரியார்

தி.மு.க. என்னும் பண்பாட்டு இயக்கத்தை நாம் எப்படி மதிப்பிடுவது என்றால், பெரியாரிடம் இருந்து தொடங்கலாம். பெரியாருடைய கொள்கைகளை வெறுமனே பிரச்சாரம் செய்தால் மட்டும் போதாது, ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் மட்டும்தான் இதை சட்டமாக, திட்டமாக, அரசாணையாக மாற்ற முடியும் என்று சொல்லித்தான் தி.மு.க.வை அண்ணா தொடங்கினார். பெரியாருடைய கொள்கைகளுக்கு சட்ட வடிவம் கொடுப்பது தி.மு.க.வின் அரசியல் செயல்பாடு என்றால், பெரியாருடைய கொள்கைகளைப் பண்பாட்டுரீதியாகக் கொண்டு செல்வதுதான் தி.மு.க.வின் பண்பாட்டுச் செயல்பாடு என்று மதிப்பிடலாம்.

பெரியார் ஒரு புரட்சிகரமான சிந்தனையாளர். அவர் கூறிய பல விஷயங்களை இன்றுவரை எல்லா மக்களாலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. உதாரணத்துக்கு, ‘பெண்கள் விடுதலை அடைய வேண்டும் என்றால், பிள்ளை பெறுவதையே நிறுத்திக்கொள்ள வேண்டும்’ என்றார் பெரியார். ‘பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால் மனித சமூகமே இருக்காதே?’ என்று கேட்கப்பட்டதற்கு, ‘இதுவரைக்கும் இருந்த மனித சமூகம் இந்தப் பெண்களுக்கு என்ன செய்தது? அப்படிப்பட்ட இந்த மனித சமூகம் இருந்தால் என்ன, இல்லாமல் போனால் என்ன, மனித சமூகம் அழிந்தால் என்ன, புல், பூண்டு போன்ற ஜீவராசிகள் விருத்தி ‘அடையட்டுமே’, என்றார் பெரியார். இந்த மாதிரியான தீவிரமான சிந்தனையை எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பெரியாரைப் பொறுத்தவரைக்கும் அவருக்கு எதுவுமே புனிதமானது கிடையாது. சாதி, மதம், கடவுள், காதல், திருமணம், குடும்பம், கற்பு, குழந்தைப்பேறு, மொழி, தேசியம் எதையுமே அவர் புனிதமாக ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியார் எல்லாவற்றையும் உடைத்து நொறுக்க வேண்டும் என்று சொன்னபோது



**சுகுணா திவாகர்**
**எழுத்தாளர்**



அங்கே மாற்றுகளை உருவாக்கியதுதான் தி.மு.க.வின் முக்கியமான பண்பாட்டுப்பணி.

## மாற்றுகள்

‘மதத்தை ஒழிக்க வேண்டும்’ என்று பெரியார் கூறுகையில், ‘மதத்தை ஒழித்துவிட்டால் அந்த இடத்தில் வேறு என்ன வைப்பது?’ என்று கேட்கப்பட்டது. ‘நடு வீட்டில் மலம் நாறுகிறது என்று நான் கூறுகிறேன், அதை எடுத்துவிட்டு என்ன வைப்பது என்று ‘நீ ஏன் கேட்கிறாய்’, என்று பெரியார் கேட்டார். ஆனால், தி.மு.க மதம், கடவுளின் இடத்தில் மொழி உணர்வை முன் வைத்தது. உலகத்திலேயே ஒரு மொழியைப் பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் செய்யத் தயாராக இருந்த ஒரே இனம் தமிழினம், அதை உருவாக்கிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

பாரதிராஜாவினுடைய ‘வேதம் புதிது’ என்னும் திரைப்படத்தில் ‘பாலு என்பது பெயர், தேவர் என்பது எங்கே வாங்கிய பட்டம்?’ என்ற வசனம் புகழ்பெற்ற வசனம். ஆனால், அந்தக் காட்சியிலே ஒரு முரண்பாடு இருக்கும். தேவர் என்பது எங்கே வாங்கிய பட்டம் என்று கேட்கிற அந்தச் சிறுவன் ஒரு பார்ப்பனச் சிறுவன். அவன் போட்டிருக்கின்ற பூணூல்கூட கேம்பிரிட்ஜ் யுனிவர்சிட்டியில் வாங்கிய மாஸ்டர் டிகிரி கிடையாது. அதுவும் ஒரு சாதிய அடையாளம்தான். ஆனாலும், அந்தக் கேள்வியில் ஒரு நியாயம் இருக்கிறது. இதிலே மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், படித்து வாங்கிய பட்டம்தான் சாதிப் பட்டத்தைவிட மேலானது என்று நினைக்கக்கூடிய ஒரு சிந்தனை எங்கிருந்து வந்தது என்றால், அது திராவிட இயக்கம், தி.மு.க.விடம் இருந்துதான் வந்தது. மதத்தை ஒழிக்க வேண்டும் என்று பெரியார் சொன்னபோது, அந்த இடத்தில் என்ன வைப்பது எனும்போது மொழி உணர்வை தி.மு.க. முன்வைத்தது. சாதிப்பட்டத்தை தூக்கிப் போட வேண்டும் என்று பெரியார் சொன்னபோது, சாதிப்பட்டத்துக்குப் பதிலாக, படித்து வாங்கிய பட்டத்தை தி.மு.க. முன்வைத்தது. அண்ணா ஒரு படத்துக்கு வசனம் எழுதுகிறார் என்றால், திரையில் அவர் பெயர் ‘சி.என்.அண்ணாதுரை எம்.ஏ’ என்று இடம்பெற்றது. நெடுஞ்செழியன் ஒரு புத்தகத்தை எழுதுகிறார் என்றால், நெடுஞ்செழியன் எம்.ஏ. என்று புத்தகத்தில் போட்டார்கள்.

அண்ணா, அன்பழகன், நெடுஞ்செழியன் பட்டதாரிகள். கலைஞர் பட்டதாரி கிடையாது. ஆனால், அவர்தான் தன் திட்டங்களின் மூலம் லட்சக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கினார். மாண்புமிகு முதல் அமைச்சர் ஸ்டாலின் அவர்களுடைய தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டங்கள் வரைக்கும், கல்விப் பெருமைதான் சாதிப் பெருமையைவிட மிக முக்கியமானது என்பதை, தொடர்ந்து வலியுறுத்தக்கூடிய ஒரு பண்பாட்டு இயக்கமாக தி.மு.க இருக்கிறது.

## மொழி

நான் முன்பே கூறியதுபோல் பெரியார் மதத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்னபொழுது அதற்குப் பதிலாக மொழி உணர்வை தி.மு.க முன் வைத்தது என்கிறபோது, மொழியைப் பற்றிய பெரியாரின் பார்வை என்ன என்பது மிக முக்கியமான ஒன்று. மொழி என்பது வெறுமனே கருத்து வெளிப்பாட்டுக்கான கருவி மட்டுமல்ல, மொழிக்குள் ஓர் அதிகாரம் இருக்கின்றது. சமூகத்தில் என்ன வகையான அதிகாரங்கள் இருக்கின்றனவோ, அவை அனைத்தும் மொழியில் பிரதிபலிக்கும். சாதியம், மதவாதம், ஆணாதிக்கம் என்று சமூகத்தில் இருக்கும் எல்லா அதிகாரங்களும் மொழியிலும் இருக்கும். கவிஞன், அறிஞன், சான்றோன் போன்ற உயர்வுச் சொற்களுக்கு, பெண்பால் வார்த்தைகள் கிடையாது. அபலை, விதவை போன்ற இழிவுச் சொற்களுக்கு ஆண்பால் சொற்களே கிடையாது. இது போன்று மொழியில் சமத்துவம் அற்ற நிலையைப் பெரியார் கேள்விக்குள்ளாக்கினார்.

பெரியாரின் சிந்தனைகளை எடுத்துக்கொண்டு தமிழ்மொழியை அதிகாரமும் ஏற்றத்தாழ்வும் அற்ற சமத்துவ மொழியாக்கும் செயற்பாட்டைத் தி.மு.க தொடர்ந்து மேற்கொள்கிறது. ‘வெண்குஷ்டம்’ என்று அழைக்கப்பட்ட நோயை ‘வெண்புள்ளி’ என்று கலைஞர் மாற்றினார். திருநங்கைகள் என்னும் சொல்லுக்கு, சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கினார். ‘மாற்றுத்திறனாளிகள்’ என்னும் சொல்லையே கலைஞர் உருவாக்கினார். இந்தியாவில் எத்தனையோ போராட்டங்கள் செய்த, மகத்தான தியாகங்கள் செய்த தலைவர்கள் உண்டு. ஆனால், மொழியில் சமத்துவம் வர வேண்டும் என்பதற்காக, ஒரு சொல்லை உருவாக்கி, பண்பாட்டுச் செயற்பாட்டை மேற்கொண்ட ஒரே தலைவர் கலைஞர்தான். இப்போது மு.க.ஸ்டாலின் ‘காலனி’ என்ற வார்த்தையை நீக்குகிறார். இப்படி தமிழை சமத்துவ மொழியாக்கும் தி.மு.க.வின் பண்பாட்டுப் பணி தொடர்கிறது.

## புதிய அர்த்தங்கள்

**‘தெய்வம் தொழாஅள் கொழுநன்**
**தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை’**

போன்ற இலக்கியங்கள் ஆணாதிக்கம் கொண்டவை என்று பெரியார் கடுமையாக விமர்சித்தார்.

‘ஒரு படைப்பின் அர்த்தத்தை, எழுதுபவர் உருவாக்குவதில்லை. மாறாக அதை வாசிப்பவரே அதற்கான அர்த்தங்களை உருவாக்குகிறார்’ என்பது நவீன மொழியியல் சிந்தனை. ஒரே ஒரு சொல் ஒவ்வொரு காலத்துக்கும் வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்கிறது. ‘சேரி’ என்றால் சேர்ந்து வாழும் இடம் என்றுதான் அர்த்தம். சங்க இலக்கியங்களில் ‘பார்ப்பனச் சேரி’ என்று குறிப்பிடப்படுவதைப் பார்க்கலாம். ஆனால், இப்போது சேரி என்றாலே அது ஒடுக்கப்பட்டவர்கள் வாழும் இடம் என்றாகிவிட்டது.

அதேபோல்தான் இலக்கியங்களும்கூட வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு அர்த்தங்களைப் பெறுகிறது. ஒரே திருக்குறள்தான். ஆனால், அதற்கு பரிமேலழகர், நச்சினார்க்கினியர் தொடங்கி சுஜாதா, சாலமன் பாப்பையா, வைரமுத்து வரை உரைகளை எழுதியிருக்கிறார்கள். ‘தெய்வம் தொழாஅள்’ என்ற குறளுக்கு ‘கடவுளைக்கூட தொழாமல் கணவனைத் தொழக்கூடிய பெண், பெய் என்று சொன்னால் மழை பெய்யும்’ என்றுதான் பெரும்பாலான உரையாசிரியர்கள் உரை எழுதியிருக்கின்றனர். ஆனால், கலைஞர் என்ன உரை எழுதியிருக்கிறார் தெரியுமா?

மழை என்பது இயற்கையாகப் பெய்ய வேண்டும். நான் சொல்லியோ, மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதியோ, கனிமொழி எம்.பி அவர்கள் சொல்லியோ பெய்தால் அது மழையே இல்லை. கலைஞர் திருக்குறள் உரையில் ‘கடவுளைக்கூட தொழாமல் கணவனைத் தொழக்கூடிய பெண், யாரோ ஒருவர் ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கி பெய்கின்ற அடிமை மழையைப்போல், அவளும் ஒரு அடிமைதான்’ என்று எழுதினார். நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறளுக்கு, இந்த நூற்றாண்டுக்கான புதிய அர்த்தத்தைக் கலைஞர் வழங்கினார். இதுதான் தி.மு.க.வின் பண்பாட்டுச்செயற்பாடு.

## தொடரும் பண்பாட்டுச் செயற்பாடு

அந்தச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாகத்தான் முதல்வர் மு.க.ஸ்டாலினும் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாவட்டம்தோறும் புத்தகக்காட்சிகள், உயரிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்கு வீடு வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்கிறார்; இந்த அமர்வுக்குத் தலைமை தாங்கும் கனிமொழி அவர்கள் ‘சென்னை சங்கமம்’ என்னும் பண்பாட்டுச் செயற்பாட்டை மேற்கொண்டார்; துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இப்போது அறிவுத் திருவிழாவை நடத்திக்கொண்டிருக்கிறார்.

தி,மு.க.வின் அரசியல் சாதனைகள், பொருளாதாரச் சாதனைகள் பற்றி நிறைய எழுதப்பட்டிருக்கின்றன. அதேபோல் தி.மு.க.வின் பண்பாட்டுச் சாதனைகள் பற்றி, கோட்பாட்டுரீதியில் இன்னும் நிறைய கட்டுரைகளும் புத்தகங்களும் எழுதப்பட வேண்டும்.”

●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலின் முக்கியமான அம்சமே தி.மு.க குறித்த மதிப்பீட்டை தி.மு.க.வுக்கு வெளியில் இருந்து செயற்படுபவர்கள் முன்வைப்பதுதான். அப்படி இந்த நூலில் அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரத் தளங் களில் தி.மு.க.வின் பங்களிப்பு குறித்து எழுதி யிருக்கும் முக்கியமான எழுத்தாளர்கள் எஸ்.வி.ராஜ துரை, அ.மார்க்ஸ், ஷோபாசக்தி, ராஜன்குறை, வீ.அரசு, ந.முருகேச பாண்டியன், மூ.அப்பணசாமி, பழ.அதியமான், கோ.ரகுபதி, கரன் கார்க்கி, லிவிங் ஸ்மைல் வித்யா, நிவேதிதா லூயிஸ், எஸ்.ஆனந்தி.